பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
27 12 2025 12 40
சனிக்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மாநிலங்களின் தலைமைச் செயலர்கள் பங்கேற்றுள்ள தேசிய மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

2. மின்னணு பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் இன்று நடைபெற்று வருகின்றன.

4. தாய்லாந்து-கம்போடியா இடையே சண்டை நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

5. உலக ரேபிட் செஸ் சாம்பியன் போட்டியின் 5வது சுற்று முடிவில் இந்தியாவின் குகேஷ் மற்றும் அர்ஜுன் எரிகைசி முதலிடத்தில் உள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

மாநிலங்களின் தலைமைச் செயலர்கள் பங்கேற்றுள்ள தேசிய மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

நேற்று தொடங்கிய இந்த மூன்று நாள் மாநாட்டில் மத்திய – மாநில அரசுகள் இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை நேற்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

மரியாதை நிமித்தமான சந்திப்பு இது என்று மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>>><><><<<

மின்னணு பொருட்களின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், மின்னணு பொருட்களின் ஏற்றுமதியில் உலகளவில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக 7 ஆவது இடத்தில் இருந்து இந்தியா 3 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மொபைல் போன் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாக உருவாகி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்தாண்டுகளில் இந்த துறை ஒரு லட்சத்து 30 ஆயிரம் வேலைவாய்ப்புகளை வழங்கி உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கம், உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் போன்றவை மின்னணு பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியின் வளர்ச்சிக்கு காரணம் என்றும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

>>><><><<<

தேர்தல் நடவடிக்கைகளின் தூண்களாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் உள்ளதாக தலைமைத் தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

*புவனேஸ்வர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடுத்த இரண்டு தினங்களுக்கு ஒடிசா மாநிலத்தில் தாம் பல்வேறு ஆலோசனைகளை மேற்கொள்ளவுள்ளதாக கூறினார்.*

*வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடனான கலந்துரையாடலும் இதில் இடம் பெறவுள்ளதாக திரு கியானேஷ்குமார் தெரிவித்தார்.*

*>>><><><<<*

*ராஜஸ்தானில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் மாநில அரசு பாரபட்சமின்றி நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.*

*பீகார் மாநிலம் Begusarai -யில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ராஜஸ்தான் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு தவறான தகவல்களை பரப்பி வருவதாகவும் கூறினார்.*

*>>><><><<<*

*புதுச்சேரியில் 17 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தை மத்திய இணையமைச்சர் திரு நித்தியானந்த ராய் இன்று தொடங்கி வைத்தார்.*

*மத்திய அரசின் சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் இந்த விளையாட்டு மைதானம் கட்டப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>><><><<<*

*ஊடுருவல்கார்களுக்கு காங்கிரஸ் ஆதரவு அளிப்பதாக அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வா ஷர்மா குற்றம்சாட்டியுள்ளார்.*

*குவஹாத்தியில் நடைபெற்ற பிஜேபி உயர்நிலைக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.*

*வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு பிஜேபி செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் தெரிவித்தார்.*

*>>><><><<<*

காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூட்டம் அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

நடப்பு அரசியல் விவகாரங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>><><><<<

கர்நாடகாவில் உள்துறை அமைச்சர் திரு பரமேஸ்வராவை முதலமைச்சராக நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி அவரது ஆதரவாளர்கள் இன்று புதுதில்லியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முதலமைச்சரை மாற்றுவது குறித்து காங்கிரஸ் தலைமை பரிசீலித்தால் திரு பரமேஸ்வராவை தான் முதலமைச்சராக நியமிக்க வேண்டும் என்று இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

>>><><><<<

ராஜஸ்தானின் *Chomu* நகரில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 110 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மத வழிபாட்டுத் தலம் அருகே கைப்பிடி அமைப்பது தொடர்பாக ஏற்பட்ட மோதலே இந்த வன்முறைச் சம்பவங்களுக்கு காரணம் என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதற்கிடையே அப்பகுதியில் இணைய தள பயன்பாட்டிற்கு விதிக்கப்பட்டிருந்த தடை இன்றும் நீட்டிக்கப்பட்டுள்ளதாக காவல்துறை அறிவித்துள்ளது.

அப்பகுதியில் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

>>><><><<<

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் தற்போது நடைபெற்று வருகின்றன.

*அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் இந்த முகாம்கள் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள் இந்த முகாமினை பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.*

>>><><><><<<

*மணிப்பூரில் எட்டு தீவிரவாதிகளை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.*

*இம்பால் அருகே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.*

*அவர்களிடம் இருந்து ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதுதொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும், எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

>>><><><><<<

*ஜம்மு கஷ்மீரில் பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.*

*தேசிய பேரிடர் பாதுகாப்புப் படை சார்பில் Doda மாவட்டத்தில் உள்ள Bhalesa பகுதியில் இந்த ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.*

*இதில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

>>><><><><<<

*சிக்கிம் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.*

*குளிர்காலம் தொடங்கியுள்ள நிலையில், சுற்றுலாப் பயணிகள் இருசக்கர வாகன சாகச சுற்றுலாவில் ஆர்வத்துடன் பங்கேற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இதன்காரணமாக சுற்றுலாத் தலங்களில் உள்ள விடுதிகள் அனைத்தும் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.*

>>><><><><<<

கர்நாடகாவில் பிரதமருக்கு எதிராக சர்ச்சைக்குரிய செய்தியை பரப்பிய அம்மாநில தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு பிரியங்க் கார்கே இதற்காக பொதுமக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தவறான புகைப்படங்களை வெளியிட்டு உண்மைக்கு மாறான செய்திகளை பரப்பியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

>>><><><<<

இந்தியா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுக்கள் இறுதி செய்யப்பட்டிருப்பது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று நியூசிலாந்து பிரதமர் திரு Christopher Luxon கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இதன்மூலம் கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார வளர்ச்சிக்கும் இது உத்வேகம் அளிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான பேச்சுக்கள் கடந்த மார்ச் மாதம் தொடங்கி நடைபெற்று வந்ததாகவும் திரு Christopher Luxon கூறியுள்ளார்.

>>><><><<<

யுக்ரைன் மீது பெரிய அளவிலான தாக்குதலை ரஷ்யா இன்று அதிகாலை நடத்தியது.

Kyiv நகரை குறிவைத்து இந்த தாக்குதலை ரஷ்யா நடத்தியதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிநவீன ஏவுகணைகளை பயன்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அந்த தகவல்கள் கூறுகின்றன.

இதன் காரணமாக Kyiv நகரின் பல்வேறு பகுதிகளில் மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது.

>>><><><<<

தாய்லாந்து-கம்போடியா இடையே சண்டை நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

தாய்லாந்தின் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு *Natthaphon Narkphanit* மற்றும் கம்போடியாவின் துணை பிரதமர் திரு *Tea Seiha*

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதியில் நடைபெற்று வரும் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

>>><><><<<

ஜப்பானில் பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீடு 5 ஆயிரத்து 800 கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்த அந்நாட்டு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சீனாவுடனான அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில் ஜப்பான் இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

>>><><><<<

விளையாட்டுச் செய்திகள்

உலக ரேபிட் செஸ் சாம்பியன் போட்டியின் 5வது சுற்று முடிவில் இந்தியாவின் குகேஷ், அர்ஜூன் எரிகைசி ஆகியோர் நான்கரை புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளனர்.

தோஹாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நார்வேயின் *Magnus Carlsen*, பிரான்சின் *Maxime Vachier Lagrave* மற்றும் ரஷ்யாவின் *Vladislav Artemiev* ஆகியோரும் நான்கரை புள்ளிகளை பெற்று கூட்டாக முதலிடத்தில் உள்ளனர்.

மகளிர் பிரிவின் நான்காவது சுற்று முடிவில் ஹரிகா மூன்றரை புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

-------------

*Monastir* சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Manas Dhamne* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 4-6, 6-0, 6-4 என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் *Mika Petkovic* -ஐ வென்றார்.